தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1983 சனவரி 27

தை 14, துந்துபி, திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை.''

ஒருவன் செய்கின்ற குற்றமே அவனுக்கு அழிவை உண்டாக்கும் பகை ஆகும். எனவே, அக்குற்றம் நேராமல் இருத்தலை வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டு ஒருவன் தன்னைக் காத்துக் கொள்ளுதல் வேண்டும்.

1. இரங்கல் குறிப்புகள்.

முன்னாள் உறுப்பினர்களான திரு. என். எம். ஆர். சுப்பராமன் திரு. ஆர். சி. சாமண்ணா கவுண்டர் ஆகியோர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. என். எம். ஆர். சுப்பராமன் அவர்கள் 25-1-1983 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். எம். ஆர். சுப்பராமன் அவர்கள் 1937 ஆம் ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரையிலும் அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டார். மதுரை நகராட்சி மன்றத்தின் தலைவராக இருமுறை பதவி வகித்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார். இவர் ஒரு சிறந்த தேசபக்தர். இவர் 1930 மற்றும் 1932 ஆம் ஆண்டில் நடைபெற்ற சத்தியாகிரஹப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை தண்டனை அடைந்துள்ளார்.

அன்னார் சிறந்த முறையில் சட்டமன்றப் பேரவையில் பணியாற்றியுள்ளார். அன்னார் அவர்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. ஆர். சி. சாமண்ண கவுண்டர் அவர்கள் 26-1-1983 அன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து நாட்டு விடுதலைப் போரில் பங்கேற்றுள்ளார். மூன்றுமுறை வடாற்காடு மாவட்ட நிர்வாகக் குழுவில் (டிஸ்டிரிக்ட் போர்ட்) தலைவராக பணி ஆற்றியுள்ளார்.

அன்னாரை இழந்துவிட்ட அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் நமது இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்களை இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

பூமிக்கடியில் நீர் அழுத்த மின்நிலையம் ஏற்படுத்தும் திட்டம்.

வினா எண். 1—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பூமிக்கடியில் நீர் அழுத்த மின் நிலையம் ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கின்ற காலத்தில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று தெரிவித்தார்கள். அது எப்போது எப்படி செயல்படுத்தப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது காடம்பாறை நீரேற்று மின் திட்டம். இதனுடைய முதல் யூனிட் 1984 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் இயங்கத் துவங்கும்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஆகும் திட்ட மதிப்பீடு எவ்வளவு? இதன் மூலம் எவ்வளவு மெகா வாட் மின்சாரம் உற்பத்தி ஆகும் என்பதை அறிவிக்க இயலுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS